செ.வெ.எண். 07/ஜூலை தேதி : 09.07.2016

# பத்திரிக்கை செய்தி




தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், கூத்தப்பாடி ஊராட்சியினைச் சேர்ந்த ஒகேனக்கல் பரிசல் துறையில் பரிசல் ஓட்டிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 20 நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பரிசல் இயக்கம் நிறுத்தப்பட்டிருந்தது. இன்று (09.07.2016) மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பரிசல் ஓட்டிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்பட்டதின் அடிப்படையில் பரிசல் ஓட்டிகள் வேலை நிறுத்தத்தினை கைவிட்டு இன்று முதல் பரிசல் ஓட்ட ஒப்புதல் அளித்ததின் பேரில் பரிசல் இயக்கம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையின் போது மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு. தொ.மு. நாகராசன், பென்னாகரம் ஒன்றியக்குழு தலைவர் திரு. மதியழகன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், காவல் துணை கண்காணிப்பாளர் திரு. மணிகண்டன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. ஆர்த்தி, திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு. கல்யாணசுந்தரம், மாவட்ட வன அலுவலர் திரு.திருமால், தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, பென்னாகரம் வட்டாட்சியர் திரு. ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.